பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
29 04 2025 **TUESDAY** 12 40 **PM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

- இளைஞர்களுக்கு அதிகாரமளித்து அவர்களை திறன்வாய்ந்தவர்களாகவும், சுயசார்புடையவர்களாகவும் மாற்றுவதே அரசின் லட்சியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.
- பஹல்காம் தீவிரவாத தாக்குதல் விவகாரத்தில் நாட்டின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டுமாறு காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.
- உலகெங்கும் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடாக பாகிஸ்தான் திகழ்கிறது என்று ஐ.நா சபையில் இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.
- தமிழகத்தில் செப்டம்பர் 6ஆம் தேதி காவலர் தினமாக கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.
- ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>>

இளைஞர்களுக்கு அதிகாரமளித்து அவர்களை திறன்வாய்ந்தவர்களாகவும், சுயசார்புடையவர்களாகவும் மாற்றுவதே அரசின் லட்சியம் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மத்திய கல்வி அமைச்சகம் சார்பில் நடைபெற்ற இளைஞர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய அவர், 21ஆம் நூற்றாண்டின் தேவைகளுக்கு ஏற்ப நாட்டின் கல்விமுறை மாற்றியமைக்கப்பட்டு வருவதாக கூறினார்.

மும்பை மற்றும் கான்பூர் ஐ.ஐ.டி-களில் செயற்கை நுண்ணறிவு, புலனாய்வு நடைமுறை, உயிரி அறிவியல், உயிரி தொழில்நுட்பம், மருத்துவம் மற்றும் மருந்து தொடர்பான உயர் ஆராய்ச்சி மையங்கள் தொடங்கப்பட்டிருப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

அனுசந்தன் தேசிய ஆராய்ச்சி அறக்கட்டளையுடன் இணைந்து, ஆராய்ச்சிப் பணிகளை முன்னெடுத்துச் செல்ல உறுதிமொழி ஏற்கப்பட்டிருப்பதற்கும் பிரதமர் பாராட்டு தெரிவித்தார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க கல்வி நிறுவனங்கள், தொழில் நிறுவனங்கள் மற்றும் புதுமைப் படைப்பாளிகள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

இந்த ஒற்றுமை வளர்ச்சியடைந்த இந்தியாவுக்கான புதிய தொழில்நுட்பங்களை உருவாக்க உதவிகரமாக இருக்கும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஆராய்ச்சிப் பணிகளுக்கான நிதி ஒரு லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருப்பதுடன், ஆறாயிரம் உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சிப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் பிரதமர் சுட்டிக்காட்டினார்.

**<<<<<<>>>>>>**

சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான தேசிய பசுமை ஹைட்ரஜன் இயக்க வாய்ப்புகள் குறித்த பயிலரங்கை மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி இன்று தொடங்கி வைத்தார்.

புதுதில்லியில் உள்ள அடல் அக்ஷயா உர்ஜா பவனில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், பசுமை ஹைட்ரஜன் சான்றிதழ் வழங்கும் திட்டத்தையும் அமைச்சர் தொடங்கி வைத்தார்.

**<<<<<<>>>>>>**

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் விவகாரத்தில் நாட்டின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத்தை கூட்டுமாறு காங்கிரஸ் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இதுதொடர்பாக, அக்கட்சியின் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில், தீவிரவாதத்தை கட்டுப்படுத்துவதில் ஒற்றுமை மற்றும் ஒருமித்த கருத்து நிலவுவது அவசியம் என்று கூறியுள்ளார்.

இதே கருத்தை வலியுறுத்தி மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராகுல்காந்தியும் பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளார்.

**<<<<<<>>>>>>**

உலகெங்கும் தீவிரவாதத்தை ஊக்குவிக்கும் நாடாக பாகிஸ்தான் திகழ்கிறது என்று ஐ.நா சபையில் இந்தியா குற்றம் சாட்டியுள்ளது.

தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஐ.நா அலுவலக தொடக்க விழாவில் கலந்து கொண்டு பேசிய ஐ.நா-வுக்கான இந்தியாவின் துணை நிரந்தர பிரதிநிதி திருமதி. **Yojna Patel,** தீவிரவாத்திற்கு பாகிஸ்தான் ஆதரவு அளித்து வருவதை அந்நாட்டு பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. **Khawaja Asif** ஒப்புக் கொண்டிருப்பதை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம், தீவிரவாத நடவடிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஆதரவும், நிதியுதவியும் அளித்து வருவது நிரூபணம் ஆகியுள்ளதாகவும் இந்தியப் பிரதிநிதி தெரிவித்தார்.

சர்தேச அமைப்புகளை பாகிஸ்தான் தவறாக பயன்படுத்தி, இந்தியாவுக்கு எதிராக ஆதாரமற்ற தகவல்களை பரப்பி வருவதாகவும் திருமதி. **Yojna Patel** கூறினார்.

**<<<<<<>>>>>>>**

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் எதிரொலியாக ஜம்மு காஷ்மீரில் உள்ள 48 சுற்றுலா தலங்கள் மூடப்படுவதாக யூனியன் பிரதேச அரசு அறிவித்துள்ளது.

பஹல்காமை அடுத்து **Baisaran** வனப்பகுதியில் கடந்த 22ஆம் தேதி தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் சுற்றுலாப் பயணிகள் 26 பேர் உயிரிழந்த சம்பவத்தை அடுத்து, சுற்றுலாப்ப யணிகளின் பாதுகாப்பு கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் உள்ள 87 சுற்றுலா தலங்களில் சூரியக்கோவில், **Shrunz** நீர்வீழ்ச்சி, **Rajori Kadhal** உள்ளிட்ட 48 இடங்களுக்குச் செல்ல˙ சுற்றுலாப் பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, போர் நிறுத்த ஒப்பந்தத்தைமீறி, பாகிஸ்தான் தொடர்ந்து ஐந்தாவது நாளாக காஷ்மீரை ஒட்டிய எல்லை கட்டுப்பாட்டு கோட்டுப் பகுதியில் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. இதற்கு இந்திய ராணுவம் தக்க பதிலடி கொடுத்து வருகிறது.

**<<<<<<>>>>>>>**

மகாவிஷ்ணுவின் 6வது அவதாரமான பகவான் பரசுராமர் ஜெயந்தியை முன்னிட்டு, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவில், ஆயுதப்பயிற்சி மற்றும் வேத ஞானம் மிக்கவரான பரசுராமரின் அருளால், மக்கள் அனைவரது வாழ்விலும் வலிமையும், துணிச்சலும் செழித்தோங்க வாழ்த்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>>

மும்பையில் நடைபெறவுள்ள வேவ்ஸ் உச்சிமாநாடு, ஊடகம் மற்றும் பொழுதுபோக்கு துறையில் இந்தியாவை முன்னணி நாடாக திகழச் செய்யும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

இதுதொடர்பான கட்டுரை ஒன்றை சமூகவலைதளத்தில் பகிர்ந்துள்ள அவர், கதை சொல்வதில் இந்தியா முன்னணியில் இருப்பதாக குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக, இராமாயணம், மகாபாரதம் போன்ற புராணங்களை எடுத்துக் கூறுவதில் இந்தியா எப்போதும் சிறந்து விளங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் படைப்பாற்றல் திறன், ஊடகங்களை தற்போதைய டிஜிட்டல் சூழலுக்கு ஏற்ப மாற்றியிருப்பதாகவும் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் ஆண்டுதோறும் செப்டம்பர் 6ஆம் தேதி காவலர் தினமாக கொண்டாடப்படும் என்று முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் காவல்துறையின் மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்துப் பேசிய அவர், காவல்துறையினருக்கான பல்வேறு சலுகைகள் வழங்கப்படும் என்பது உள்ளிட்ட 102 அறிவிப்புகளை வெளியிட்டார்.

(சவுண்ட் பைட் - முதலமைச்சர் 43 செகண்ட்ஸ்)

<<<<<<>>>>>>

மதுரை அருள்மிகு மீனாட்சியம்மன் திருக்கோவில் சித்திரைத் திருவிழா கொடியேற்றத்துடன் இன்று தொடங்கியது.

விழாவின் முக்கிய அம்சமான கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளும் நிகழ்ச்சி வரும் 12ஆம் தேதி நடைபெறும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - ரகுராஜா 45 செகண்ட்ஸ்)

**<<<<<<>>>>>>**

கனடா நாட்டில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் தற்போதைய பிரதமர் திரு. மார்க் கார்னி தலைமையிலான லிபரல் கட்சி முன்னணியில் உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

தற்போதைய நிலவரப்படி, அந்நாட்டு நாடாளுமன்றத்தில் மொத்தம் உள்ள 343 இடங்களில் ஆட்சியை பிடிக்க 172 இடங்கள் தேவைப்படும் நிலையில், ஆளும் லிபரல் கட்சி 167 இடங்களில் முன்னிலை வகிக்கிறது.

பிரதமான எதிர்க்கட்சியான கன்சர்வேட்டிவ் கட்சி 145 இடங்களில் முன்னிலை பெற்றுள்ளது.

**<<<<<<>>>>>>**

அமெரிக்காவில் பணியாற்றும் டிரக் ஓட்டுநர்கள் ஆங்கிலத்தை கட்டாயம் அறிந்திருக்க வேண்டும் என்று அந்நாட்டு அதிபர் திரு. டொனால்டு ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார்.

நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில், சரக்கு வாகன ஓட்டுநர்கள் முக்கியப் பங்கு வகிப்பதாக குறிப்பிட்டுள்ள அந்த உத்தரவில், நாட்டின் அலுவல் மொழியான ஆங்கிலத்தை அறிந்திருப்பது பாதுகாப்பான போக்குவரத்தை உறுதி செய்யும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம், சோதனைச் சாவடிகள், போக்குவரத்து எச்சரிக்கை பலகைகள் மற்றும் எல்லைப்புற ரோந்து வாகனங்களில் இடம்பெற்றுள்ள ஆங்கில வாசகங்களை எளிதில் புரிந்து கொள்ள உதவிகரமாக இருக்கும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

ஆனால் இந்த உத்தரவுக்கு அமெரிக்காவில் பணியாற்றும் சீக்கிய சமுதாயத்தைச் சேர்ந்த வாகன ஓட்டுநர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

<<<<<<>>>>>>>

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் தில்லி இன்று கொல்கத்தா அணியை எதிர்கொள்கிறது.

தில்லியில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

<<<<<<>>>>>>>

முத்தரப்பு மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தென்னாப்பிரிக்க அணிக்கு எதிரான ஆட்டத்தில் இந்தியா சற்றுமுன்வரை 38 ஓவரில் 3 விக்கெட் இழப்புக்கு 173 ரன் எடுத்துள்ளது.

<<<<<<>>>>>>>